# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10.* Ph. 0452 – 4354302


# இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள இரத்தம்

**முன்னுரை :**

பரிசுத்த வேதாகமத்தில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும் ஒரு சிவப்புக் கோடுபோல் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் தொடர்ந்து செல்வதைக் காணலாம். ஆதியாகமத்தில் பாவ மனுஷனாகிய ஆதாமுக்கும், அவனுடைய மனைவியாகிய ஏவாளுக்கும் தோல் உடைகளை உண்டாக்கும்படி தேவன் ஒரு மிருகத்தை அடித்து அதன் இரத்தத்தைச் சிந்தினார் என்று ஆதியாகமம் 3:21–ல் காண்கிறோம். பரிசுத்தவான்கள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் சாத்தானை ஜெயித்தார்கள் என்று வெளிப்படுத்தின விசேஷம் 12:11–ல் வாசிக்கிறோம். பரிசுத்த வேதாகமத்தில் ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும் இரத்தம் சிந்தப்பட்டதை (பலி செலுத்துதல்) குறித்து வாசிக்கிறோம். எனவே இது ஒரு குறிப்பிடத்தகுந்த புத்தகம் ஆகும். தென் கரோலினா தேசத்தில் உள்ள மலைப்பகுதியில் ஒரு பாறையின்மேல் இவ்விதமாக எழுதப்பட்டிருந்தது. அதாவது ''தம்முடைய சொந்தக் குமாரனைக் கொன்ற கடவுள் யாருக்கு வேண்டும்?'' இலட்சக்கணக்கான மக்கள் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமை, அதன் நோக்கம் இவைகளை இன்றைக்கும் உணராதவர்களாக இருக்கிறார்கள். இந்த இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் மகத்துவத்தை நீங்கள் தெளிவாக அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்தோடு இப்பாடம் தயார் செய்யப்பட்டுள்ளது.

## இப்பாடத்தின் முக்கியத்துவம் :

நான் சிறுவனாக இருக்கும் பொழுது எனது பாவத்தைக்குறித்து மனஸ்தாபப்பட்டு கர்த்தரண்டை திரும்பி, அவரை என் சொந்த இரட்சகராகவும், ஆண்டவராகவும் ஏற்றுக்கொண்டேன். அவருடைய பரிசுத்த இரத்தம் என் பாவங்களை எல்லாம் கழுவி, மன்னித்து மீட்டிருக்கிறது. அவருடைய இரத்தத்தால் சரீர, ஆவிக்குரிய நிலையில் நான் இரட்சிக்கப் பட்டிருக்கிறேன். ஒரு சமயம் இரத்தம் சிந்தப்படுதல் பயங்கரமாக கருதப்பட்டது. ஆனால் இன்றைக்கு இரத்தம் தங்கத்தைக் காட்டிலும் விலையேறப்பெற்றதாக கருதப்படுகிறது. ஆஸ்பத்திரியில் இரத்த சேமிப்பு பிரிவில் எல்லா வகையான குரூப் இரத்தங்களும் சேகரிக்கப்பட்டு சேமித்து வைக்கப்படுகிறது. நோயாளிகளில் யாருக்கு இரத்தம் தேவைப்படுகிறதோ உடனே அவர்களுக்கு ஏற்ற குரூப் இரத்தத்தைக் கொடுத்து அவர்களைக் காப்பாற்றுகிறார்கள். எனவே மக்கள் மத்தியில் இரத்தம் விலையேறப்பெற்றதாய் எண்ணப்படுகிறது ''அழிவுள்ள வஸ்துக்களாகிய வெள்ளியினாலும் பொன்னினாலும் மீட்கப்படாமல், குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்கள்'' என்று 1 பேதுரு 1:18,19–ல் வாசிக்கிறோம். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிசுத்த இரத்தத்தின் மூலமே பாவமன்னிப்பும், மீட்பும் இருக்கிறது (எபேசியர் 1:7; எபிரெயர் 9:22; வெளி. 5:9). இவ்வுலகத்தில் பாவத்தைப் போக்குவதற்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பலியைக் காட்டிலும் வேறு ஒரு பலி இல்லை (எபிரெயர் 10:26). எனவே இந்த இரத்தத்தின் வல்லமை, இதன் மதிப்பு முதலியவற்றை தெளிவாக அறிந்துகொள்வது மிகவும் அவசியமாகும்.

**பாடம்**

## I. இரத்தம் சிந்தப்படுதலின் மதிப்பைக் குறிக்கும் இரண்டு ஆதார வசனங்கள் :

A. லேவியராகமம் 17:11

''மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் . . . பலிபீடத்தின் மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவம் நிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காக பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே.''

1. மனிதனுடைய உயிர் இரத்தத்தில் இருக்கிறது. கிறிஸ்து தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்தார் என்று வேதம் சொல்லுகிறது. அதனுடைய பொருள் தம்முடைய இரத்தத்தையே நமக்காகக் கொடுத்தார் என்பதுதான் (மாற்கு 10:45; யோவான் 10:17,18).
2. ஒருவனுடைய இரத்தத்தின் மதிப்பு அவனுடைய ஜீவனைக்கொண்டே கணக்கிடப்படுகிறது. நமது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் விலையேறப்பெற்றதாய் மதிப்பிட முடியாததாய் இருக்கிறது.
3. ஒரு மிருகத்தைக் கொல்வதன் மூலம் இஸ்ரவேல் மக்களுக்கு பாவப் பிராயச்சித்தம் ஏற்படவில்லை. ஆனால் அந்த மிருகத்தின் இரத்தத்தை பலிபீடத்தின்மீது தெளிக்க வேண்டியது அவசியமாய் இருந்தது. கர்த்தராகிய

இயேசு கிறிஸ்து கல்வாரி பலிபீடத்தில் சிந்திய அந்த பரிசுத்த இரத்தத்தின் மூலமே இரட்சிக்கப் பட்டிருக்கிறோம். அவருடைய பரிபூரண ஜீவியத்தின் மூலம் நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று வேதம் போதிப்பதே கிடையாது (எபேசியர் 1:7; 1 பேதுரு 1:18,19).

4. இஸ்ரவேல் மக்களுக்குப் பதிலாக அவர்களுடைய இடத்தில் மிருகமானது பலியாக செலுத்தப்பட்டது. அதேவிதமாக கிறிஸ்து நமக்காக தம்மையே பலியாகக் கொடுத்தார் (கலாத்தியர் 2:20; 1:4; தீத்து 2:14).
5. பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும் (எசேக்கியேல் 18:4). இஸ்ரவேல் ஜனங்களின் பாவத்திற்காக மிருகமானது பலியிடப்பட்டு, அதனுடைய இரத்தம் பலிபீடத்தின்மீது தெளிக்கப்பட்டது. இதை தேவன் அங்கீகரித்தார். இதேவிதமாக கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் அடிப்படையில் நம்மை நீதிமான்களாகக் கணக்கிடுகிறார்.

B. எபிரெயர் 9:22

“நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ் சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.”

1. கர்த்தராகிய கிறிஸ்து சிந்திய பரிசுத்த இரத்தமே நம்முடைய பாவங்களை மன்னித்து, மீட்டிருக்கிறது.
2. மிருகத்தின் இரத்தமானது இஸ்ரவேல் ஜனங்களின் பாவத்தை மூடியதே அல்லாமல், முற்றிலுமாக நீக்கவில்லை. ஆனால் கர்த்தராகிய கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே பாவத்தை முற்றிலுமாக நீக்குகிறது (எபிரெயர் 9:26).

## II. வேதத்தில் முதலாவது சிந்தப்பட்ட இரத்தத்தின் மூலம் தெரிந்துகொள்ள வேண்டிய பாடங்கள் :

வேதத்தில் முதன்முதலாக இரத்தம் சிந்தப்பட்டதைக் குறித்து ஆதியாகமம் 3:21–ல் வாசிக்கிறோம். “தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும், அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்.” கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள் :

1. ஆதாம் பாவம் செய்தபிற்பாடு தன்னுடைய குற்றத்தை தேவனுடைய சமூகத்திலிருந்து மறைத்துக்கொள்ள முயற்சித்தான். ஆனால் அவனாலே அது கூடாமற்போயிற்று. இதேவிதமாக எல்லா மனிதரும் தங்களுடைய பாவத்தை மறைக்க எத்தனையோ முயற்சிகள் எடுக்கிறார்கள். ஆனால் தேவனுடைய சமூகத்திலிருந்து மறைத்துக்கொள்ள முடியாது (ஆதியாகமம் 3:7,8).
2. தேவன் தம்முடைய நீதியை நிறைவேற்றுவதற்கு முன்பு ஆதாமிடத்தில் தம்முடைய இரக்கத்தைக் காண்பிக்க முடியாதவராக இருந்தார். தேவன் நம்மை இரட்சிப்பதற்கு முன்பு நம்முடைய பாவத்திற்கு ஒரு முடிவை ஏற்படுத்த வேண்டியது அவசியமாயிருந்தது. கிறிஸ்து நமக்குப் பதிலாக பாவத்தைப் போக்கும் பொருட்டு சிலுவையிலே மரித்தார் (கலாத்தியர் 1:4; 2:20).
3. ஆதாமுக்கு தோல் உடை பண்ணுவதற்கு ஒரு மிருகம் அடிக்கப்பட வேண்டியதும், அதனுடைய இரத்தம் சிந்தப்பட வேண்டியதும் அவசியமாய் இருந்தது. பாவத்தின் சம்பளம் மரணம் (ரோமர் 6:23; எசேக்கியேல் 18:4,20). மதம், மனித முயற்சி, நல்நடத்தை, நற்செயல்கள் முதலியவைகள் பாவத்திற்கு பரிகாரத்தை உண்டாக்காது. உங்களையும், என்னையும் பாவத்திலிருந்து இரட்சிக்க கிறிஸ்து தம்முடைய சொந்த இரத்தத்தையே கொடுக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது (எபிரெயர் 9:26).
4. ஆதாம் செய்த பாவத்திற்கு அவனே மரிக்க வேண்டும். ஆனால் அவனுக்குப் பதிலாக ஒரு மிருகம் அடிக்கப்பட்டு அதனுடைய இரத்தம் சிந்தப்பட்டது. “உலகத் தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி” என்று கிறிஸ்துவைக் குறித்து நாம் வெளி. 13:8–ல் வாசிக்கிறோம். “தேவன் நிர்ணயித்திருந்த ஆலோசனையின் படியேயும், அவருடைய முன்னறிவின்படியேயும் ஒப்புக்கொடுக்கப்பட்ட அந்த இயேசு” என்று அப்போஸ்தலர் 2:23–ல் வாசிக்கிறோம். அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாக தன்னுடைய கடிதத்தில் “என்னில் அன்புகூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்” (கலாத்தியர் 2:20) என்று கூறியிருக்கிறார்.

## III. கிறிஸ்து சிந்திய இரத்தம் வல்லமையுடையதாய் இருக்கிறது :

**A. தேவனுடைய பரிசுத்தத்தையும், நீதியையும் நிறைவேற்றுவதற்கு கிறிஸ்துவினுடைய இரத்தம் வல்லமையுடையதாய் இருக்கிறது :**

1. பாவத்துக்குப் பரிகாரத்தை உண்டுபண்ணுவதற்கு முன்பு தேவன் தம்முடைய இரக்கத்தை ஆதாமின் மேல் காண்பிக்க முடியாதவராய் இருந்தார் என்பதை ஆதியாகமம் 3:21–ன் மூலமாக நாம் அறிந்து கொண்டோம்.
2. தேவன் இரக்கமுள்ளவர் (சங்கீதம் 103:11). தம்முடைய இரக்கத்தைக் காண்பிக்க ஆவலுடையவராய் இருக்கிறார் (தீத்து 3:5,6). ஆனால் அதே சமயத்தில் அவர் முற்றிலும் பரிசுத்தமுள்ளவராய் இருக்கிறார். எனவே அவர் பாவத்தை தம்முடைய கண்களினாலே பார்க்கவொட்டார் (ஆபகூக் 1:13).

3. தேவன் தம்முடைய கண்களினாலே பாவத்தைப் பார்த்து பொறுத்துக் கொண்டு கடந்து செல்பவரல்ல, முதலாவது ஒரு முடிவை ஏற்படுத்திய பிற்பாடே நம்மிடத்தில் தம்முடைய இரக்கத்தைக் காண்பிக்கிறவராய் இருக்கிறார்.

4. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிந்திய பரிசுத்த இரத்தத்தின் மூலம் நம்முடைய பாவங்கள் அகற்றப்பட்டு விட்டது (எபிரெயர் 9:26,28; 10:12). அவருடைய அளவில்லாத கிருபையின் மூலமாக நாம் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (எபேசியர் 2:8,9). கிறிஸ்து நம்முடைய பாவத்தைச் சுமந்து தீர்த்த படியினாலே தேவனுடைய நீதியும், பரிசுத்தமும் நிறைவேற்றப்பட்டது. இப்பொழுது கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைப்பவர்களுக்கு அவர் கிருபாதார பலியாக இருக்கிறார் (ரோமர் 3:26).

**B. தெய்வீக நீதியென்னும் வஸ்திரத்தை வழங்குவதற்கு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் வல்லமையுடையதாய் இருக்கிறது :**

1. "கர்த்தர் ஆதாமுக்கும், அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்" (ஆதியாகமம் 3:21). இங்கே மனிதனுடைய பாவத்தை மூடும் பொருட்டு அவனுக்கு உடை கொடுக்கப்பட்டது. இது தேவனுடைய நீதியை குறிக்கக் கூடியதாய் இருக்கிறது.

2. தேவனுடைய நீதி வஸ்திரத்துக்கு ஆதாரமாக சொல்லப்பட்டிருக்கிறது :

   a. "நீதியைத் தரித்துக்கொண்டேன்; அது என் உடுப்பாயிருந்தது, என் நியாயம் எனக்கு சால்வையும் பாகையுமாய் இருந்தது" (யோபு 29:14)

   b. ". . . அவர் இரட்சிப்பின் வஸ்திரங்களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்குத் தரித்தார்" (ஏசாயா 61:10).

   c. "உம்முடைய ஆசாரியர்கள் நீதியைத் தரித்து, உம்முடைய பரிசுத்தவான்கள் கெம்பீரிப்பார்களாக" (சங்கீதம் 132:9).

3. நியாயப்பிரமாணத்தின் மூலம் வருகிற நீதி அல்ல, ஆனால் தேவன் தம்முடைய குமாரனின் மூலமாக அவருடைய நீதியை நமக்குத் தந்திருக்கிறார் (ரோமர் 3:21,22). நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும் படிக்கு பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரிந்தியர் 5:21). இந்த வசனத்தை மையமாக வைத்து **மார்டின் லூத்தர்** அவர்கள் இவ்விதமாக சொல்லியிருக்கிறார் : அதாவது "நாம் செய்த, செய்யவிருக்கும் அனைத்துப் பாவங்களும் கிறிஸ்துவினுடைய சொந்தப் பாவங்களாக மாற்றப்பட்டு, அவருடைய நீதியானது நமக்கு மாற்றப்பட்டு என்றைக்கும் பாவம் செய்யாத கிறிஸ்துவைப்போல் நீதிமான்களாக இருக்கிறோம்" என்பதே.

4. தேவன் நமக்கு கிறிஸ்துவாகிய பலியின் மூலமாக அந்த நீதியையே கொடுத்திருக்கிறார் (ரோமர் 10:4; பிலிப்பியர் 3:9).

5. மனிதன் தன்னுடைய பாவத்திலிருந்து இரட்சித்துக்கொள்ள எடுக்கக்கூடிய முயற்சியும், சுயநீதியும் முற்றிலும் வெறுமையாக உள்ளது என்பதை நாம் அறிந்துகொள்கிறோம். ஆதாமுடைய உதவியற்ற தன்மையை ஆதியாகமம் 3:21–ன் மூலமாக அறிந்து கொள்கிறோம். கிரியைகளினாலே இரட்சிக்கப்படாமல் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பலிமரணத்தினாலேயும் அவர் சிந்திய பரிசுத்த இரத்தத்தினாலேயேயும், கிருபையினாலேயும் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் (ரோமர் 3:21,22; 4:4; கலாத்தியர் 2:16; ஏசாயா 64:6).

**C. பரிசுத்த தேவனுக்கு முன்பாக நம்மை குற்றவாளிகள் அல்ல (குற்றமற்றவர்கள்) என்று தீர்க்க கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் வல்லமை கொண்டதாய் இருக்கிறது : (ரோமர் 5:9; 3:24,26)**

1. "குற்றவாளிகள் அல்ல (அல்லது) குற்றமற்றவர்கள்" என்ற வார்த்தையானது நீதிமான்களாக்கப்பட்டிருக் கிறோம் என்பதற்கு சமமாய் இருக்கிறது. 'DIKAIOO' என்ற வார்த்தையானது இரண்டு அர்த்தங்களையும், அதாவது குற்றமற்றவன், நீதிமான்கள் என்பதைக் குறிக்கும் வகையில் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

2. பொதுவாக ஜனங்களுடைய பார்வையில் காரியங்களை 'சரிசெய்து கொள்வது' என பொருள்படுகிறது. ஆனால் தேவனுடைய பார்வையில் குற்றமற்றவன், குற்றமில்லாதவன் என்று அறிவிப்பதே 'DIKAIOO' என்ற கிரேக்க வார்த்தையின் பொருளாகும்.

3. குற்றமற்றவன் என்ற வார்த்தையானது நீதிமன்றத்திலே நீதிபதியின் மூலம் சொல்லப்படக்கூடிய வார்த்தையாகும். ஒரு மனிதன் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைக்கும் பொழுது அவருடைய நீதியை வஸ்திரமாக அணிந்து கொள்கிறான் (பிலிப்பியர் 3:9; ரோமர் 3:22). கிறிஸ்துவின் நீதியை வஸ்திரமாக தரித்துக் கொண்டு ஒரு மனிதன் தேவனுடைய நீதிமன்றத்திலே நடந்து செல்கிறான். எதற்காகவெனில், இவ்வுலகத்தின் நீதிபதியாகிய அவருடைய வாயிலிருந்து பிறக்கக்கூடிய 'குற்றமற்றவன்' என்ற வார்த்தையை கேட்கும்படியாக.

4. குற்றமற்றவன் அல்லது நீதிமான் என்று தீர்ப்பு வழங்குதல் வெறும் மன்னிப்பைக் குறிக்காது. தேவன் தாமே நம்மை ஒன்றும் அறியாதவர்கள் என்றும், குற்றமற்றவர்கள் என்றும் கூறி பாவமே செய்யாதவர்களைப்போல கணக்கிடுகிறார் (யூதா 24).
5. நாம் குற்றமற்றவர்கள் என்று தீர்ப்பப்படுவதற்கு 'தேவன்' தாமே அதற்கு ஆதாரம் உடையவராகவும் இருக்கிறார் (ரோமர் 3:26,30, 8:39). 'விசுவாசம்' அதற்கு கருவியாக உள்ளது (ரோமர் 5:1). 'கிருபை' அதற்கு அடிப்படையாக உள்ளது (ரோமர் 3:24). 'கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்' அதற்கு உறுதியளிக்கிறது (ரோமர் 4:25). 'இயேசுகிறிஸ்து சிந்திய பரிசுத்த இரத்தமே' நாம் குற்றமற்றவர்கள் என்று தீர்க்கப்படுவதற்கு மூலகாரணமாய் இருக்கிறது (ரோமர் 5:9, 3:24).

**D. அடிமைத்தனத்திலிருந்தும், பாவத்திலிருந்தும், நம்மை மீட்க கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் வல்லமை கொண்டதாய் இருக்கிறது : (1 பேதுரு 1:18,19; கலாத்தியர் 3:13; எபேசியர் 1:7; ரோமர் 3:24)**

<u>**குறிப்பு :**</u> மீட்பின் முழு விளக்கத்தை அறிந்து கொள்வதற்கு பாடம் 13–ஐ திருப்பிப் பார்க்கவும்.

1. நாம் பாவத்துக்கு அடிமைகளாயிருந்தோம் என்று வேதத்தில் பார்க்கிறோம் (யோவான் 8:34; ரோமர் 6:16; 7:14). அது மட்டுமல்லாமல் நாம் மரண ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டோம் (ரோமர் 6:16–23; 5:12).
2. நம்மை பாவத்திலிருந்து விடுவித்து, சுதந்தரவான்களாக மாற்றுவதற்கு தேவையான விலைக்கிரயத்தை செலுத்த கிறிஸ்து ஆயத்தமாயிருந்தார் (அப்போஸ்தலர் 20:28; தீத்து 2:14). அந்த விலைக்கிரயமானது கிறிஸ்துவின் சொந்த இரத்தமே (1 பேதுரு 1:18,19; 1 கொரிந்தியர் 6:20).
3. மீட்பு என்ற பதமானது வாங்குவதை மாத்திரம் குறிக்காமல் பாவச் சந்தையிலிருந்து வெளியே கொண்டுவந்து விடுவதைக் குறிக்கக்கூடியதாய் இருக்கிறது (கலாத்தியர் 3:13; 4:5). 'மீட்பு' என்ற வார்த்தையின் பொருள் 'சந்தையில் வாங்கி கொண்டு வருதல்' என்பதாகும். வாங்கிய பொருளை மறுபடியும் விற்க முடியாது. அதனுடைய பண்டமாற்று முறையானது முடிந்து விட்டது என்பதை 'மீட்பு' என்ற வார்த்தையானது தெரிவிக்கிறது.
4. ஒரு விசுவாசி மறுபடியுமாக பாவத்திற்கோ அல்லது நியாயப்பிரமாண சட்டத்திற்கோ விற்கப்பட முடியாது.
5. புதிய ஏற்பாட்டில் 'மீட்பு' என்ற வார்த்தையானது ஒருபடி மேலாகப் பொருள் தரக்கூடியதாய் இருக்கிறது. அதாவது பாவச்சந்தையிலிருந்து வாங்கிக்கொண்டு வருவது மாத்திரமல்ல, சுதந்தரவான்களாக மாற்றப் படுவதையும் குறிக்கக் கூடியதாய் இருக்கிறது. இதற்கு 'லுட்ரோ' என்ற கிரேக்கு வார்த்தை பயன்படுத்தப் பட்டிருக்கிறது. இதனுடைய பொருள் 'விலைக்கிரயம் செலுத்தி விடுதலை கொடுப்பது' ஆகும்.
   a. தீத்து 2:14, ''அவர் நம்மை சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு.'' இங்கே நம்முடைய பாவங்களி லிருந்தும், பாவத்தைச் செய்யக்கூடிய சுயசித்தத்திலிருந்தும் நாம் விடுதலை பெற்றிருக்கிறோம்.
   b. 1 பேதுரு 1:18,19, ''உங்கள் முன்னோர்களால் பாரம்பரியமாய் நீங்கள் அநுசரித்து வந்த வீணான. . . மீட்கப்பட்டீர்கள்.'' இங்கே நம்முடைய மதச்சடங்காச்சாரங்களிலிருந்து நாம் விடுதலை பெற்றிருக்கிறோம்.
6. 'லுட்ரோ' என்ற கிரேக்கு வார்த்தைக்கு தொடர்புடைய மற்றொரு கிரேக்கு வார்த்தை 'லுட்ரோன்.' இதனுடைய பொருள் 'மீட்கும் பொருளைக் கொடுத்து விடுதலையாக்குவது'.
   a. 1 தீமோத்தேயு 2:6, ''எல்லாரையும் மீட்கும் பொருளாக இயேசுகிறிஸ்து தம்மை ஒப்புக்கொடுத்தார்.''
   b. மாற்கு 10:45,''மனுஷகுமாரன் அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க வந்தார்.''
7. பாவச்சந்தையில் விற்கப்பட்டவர்களாயிருந்த நம்மை விலைக்கு வாங்கி வெளியே கொண்டு வந்து விடுதலையாக்கும் படியாகவே இயேசுகிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார்.
   a. அடிமைத்தனத்திலிருந்தும், நியாயப்பிரமாணச் சட்டத்தின் சாபத்திலிருந்தும் மீட்கும்படியாக கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார் (கலாத்தியர் 3:13).
   b. பாவத்தின் வல்லமையிலிருந்தும், அதனுடைய ஆளுகையிலிருந்தும் மீட்கும்படியாக கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார் (ரோமர் 8:2).
   c. சாத்தானின் ஆளுகையிலிருந்தும், வல்லமையிலிருந்தும் மீட்கும்படியாக கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார் (எபிரெயர் 2:15).
   d. இவ்வுலகத்தின் அடிமைத்தனத்திலிருந்தும், கேடுபாடுகளிலிருந்தும் மீட்கும்படியாக கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார். இவையாவும் இயேசு கிறிஸ்துவின் பரிசுத்த இரத்தத்தின் மூலம் நமக்குக் கிடைக்கின்றன (எபிரெயர் 9:12).

**E. தேவனை திருப்திப்படுத்த கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் வல்லமையுடையதாய் இருக்கிறது : (ரோமர் 3:25; 1 யோவான் 4:10; 2:2 – இந்த வசனங்களை கவனமாக வாசிக்கவும்)**

1. கிறிஸ்து இயேசுவினுடைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதாரபலியாக அவரையே ஏற்படுத்தினார் (ரோமர் 3:25,26).
2. நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே (1 யோவான் 2:2). நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலியாக தம்முடைய குமாரனை இவ்வுலகத்தில் அனுப்பினார் (1 யோவான் 4:10).
3. நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதாரபலியாக தம்முடைய குமாரனை தேவன் இவ்வுலகத்திற்கு அனுப்பினார் என்பதை நாம் முழுவதும் அறிந்துகொள்ள முடியாவிட்டாலும் இதிலே சந்தோஷப்படுகிறவர்களாய் இருக்கிறோம்.
4. 'திருப்திபடுத்துதல்' என்ற வார்த்தையின் அர்த்தத்தை எளிய முறையில் கொடுத்துள்ளேன்.
   a. கிரேக்கு பாஷையில் உள்ள பழைய ஏற்பாட்டில் 'திருப்திபடுத்துதல்' என்ற வார்த்தையானது 'கிருபாசனம்' என்று மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது (எபிரெயர் 9:5).
   b. வனாந்தரத்தில் மோசேயினால் செய்யப்பட்ட ஆசரிப்புக்கூடாரத்தில் உள்ள மகா பரிசுத்த ஸ்தலத்தில் உடன்படிக்கைப் பெட்டி இருந்தது. அதை மூடியிருந்ததே 'கிருபாசனம்' எனப்படும்.
   c. வருடத்திற்கு ஒரு முறை பலி செலுத்தும் அந்த நாளிலே பிரதான ஆசாரியன் மிருகத்தின் இரத்தத்தை எடுத்து மகா பரிசுத்த ஸ்தலத்தில் உள்ள கிருபாசனத்தின் முன்பாக தெளிப்பான் (லேவியராகமம் 16:14; எபிரெயர் 9:7).
   d. மகா பரிசுத்த ஸ்தலமும் அதில் உள்ள கிருபாசனமும் தேவனோடு தொடர்பு கொள்ளக்கூடிய இடமாக இருக்கிறது (யாத்திராகமம் 25:21,22). தேவன் கிருபாசனத்தில் தெளிக்கப்பட்ட அந்த இரத்தத்தைப் பார்க்கும்பொழுது இஸ்ரவேல் ஜனங்களின் பாவங்கள் அறிக்கையிடப்பட்டதையும், நியாயப்பிரமாணச் சட்டங்கள் கடைபிடிக்கப்பட்டதையும், அவருடைய பரிசுத்தமும், நீதியும் நிறைவேற்றப்பட்டதையும் காண்கிறார். அதுமட்டுமல்லாமல், நியாயத்தீர்ப்பு வழங்க வேண்டிய சிங்காசனம் இரக்கத்தின் சிங்காசனமாக மாறுகிறது. பிரதான ஆசாரியன் மூலமாக இப்பொழுது தேவன் தம்முடைய ஜனங்களோடு நட்புறவு கொள்ள முடிகிறது (எபிரெயர் 9:10–15).
   e. மகா பரிசுத்த தேவன் தகுதியற்ற பாவிகளாகிய உங்களையும், என்னையும் சந்தித்து நட்புறவு கொள்ளக்கூடிய ஒரே இடம் சிலுவை. இதை தவிர வேறு இடம் மனிதனுக்கு இவ்வுலகத்தில் இல்லை என்பதை மனதில் நாம் கொள்ள வேண்டும்.
   f. பிரதான ஆசாரியராகிய நமது கிறிஸ்து நமது பாவத்திற்காக தம்முடைய விலையேறப்பெற்ற பரிசுத்த இரத்தத்தை கல்வாரி சிலுவையிலே சிந்திய பொழுது அவர் நம்முடைய கிருபாசனமாகவும் மாறிவிட்டார் (எபிரெயர் 9:11; 1 யோவான் 4:10).
   g. கிறிஸ்து நமது சார்பாக தம்மையே பலியாக ஒப்புக்கொடுத்தார். அவர் சிந்திய பரிசுத்த இரத்தத்தின் மூலம் தேவன் நம்முடைய பாவத்துக்குரிய விலைக்கிரயம் முழுவதும் செலுத்தப்பட்டதையும், உடைந்து போன அவருடைய நீதியின் சட்டமானது நிறைவேற்றப்பட்டதையும், அவருடைய பரிசுத்தம் திருப்தியானதையும், அவருடைய நீதி சரிவர தீர்க்கப்பட்டதையும் காண்கிறார்.
   h. கிறிஸ்து சிலுவையில் சிந்திய அந்த பரிசுத்த இரத்தத்தின் மூலம் ஒரு மனந்திரும்பிய மனிதன், பரிசுத்த தேவனோடு இனிமையான பூரணமான உறவு வைத்துக்கொள்ள முடியும்.

**F. நம்மை தேவனோடு ஒப்புரவாக்க கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் வல்லமையுடையதாய் இருக்கிறது : (கொலோசெயர் 1:20,21; ரோமர் 5:10; 2 கொரிந்தியர் 5:18,19; எபேசியர் 2:16; எபிரெயர் 2:17 – இந்த வசனங்களைக் கவனமாக வாசிக்கவும்)**

1. தேவன் நம்மோடு ஒப்புரவானார் என்று ஒருபோதும் சொல்லப்படவில்லை. அவர் நம்முடைய விரோதி அல்ல. அவர் பாவம் செய்யவில்லை. நீங்களும், நானும் மாத்திரமே அவரிடத்தில் ஒப்புரவாக வேண்டும் (2 கொரிந்தியர் 5:19; கொலோசெயர் 1:21).
2. நாம் தேவனிடத்தில் ஒப்புரவாவதற்கு நாமே எதையும் செய்யக்கூடாதவர்களாயிருந்தோம். ஆனால் நமது பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்து நமக்காக அதை செய்து முடித்தார் (எபிரெயர் 2:17).

3. 'ஒப்புரவாகுதல்' என்ற வார்த்தையானது 'திருப்திப்படுத்துதல்' என்ற வார்த்தைக்கு நேர் எதிரிடையானது. மனிதனுடைய சார்பாக தேவனுக்கு கிறிஸ்து செய்த பணி 'திருப்திபடுத்துதல்' ஆகும். தேவனுடைய சார்பில் மனிதனுக்கு கிறிஸ்து செய்த பணி 'ஒப்புரவாகுதல்' ஆகும். முதலாவது தேவனுடைய உரிமைகள் சந்திக்கப்பட்டது. இரண்டாவது மனிதனுடைய தேவைகள் சந்திக்கப்பட்டது.
4. ஒப்புரவாகுதலின் மூலமாக பகைமை நீக்கப்பட்டது (ரோமர் 5:10, கொலோசெயர் 1:21). பாவம் கழுவப்பட்டது. பாவத் தண்டனைக்குரிய விலைக்கிரயம் செலுத்தப்பட்டது (2 கொரிந்தியர் 5:19; எபிரெயர் 9:26,1:3). தடைகளும்,மதில் சுவர்களும் தகர்த்தெறியப்பட்டது (எபேசியர் 2:14). தேவனுக்கு விரோதிகளாய் தூரமாய் இருந்த நீங்களும், நானும் இப்பொழுது ஒப்புரவாக்கப்பட்டிருக்கிறோம் யுத்தம் முடிந்து விட்டது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் முலம் சமாதான உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது (கொலோசெயர் 1:20,21).

**G. முழுமையான சுத்திகரிப்பையும், பாவமன்னிப்பையும் கொடுக்க கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் வல்லமையுடையதாய் இருக்கிறது : (எபேசியர் 1:7; மத்தேயு 26:28; 1 யோவான் 1:7–9)**

1. எபிரெயர் 9:22, ''இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.'' 'மன்னிப்பு' என்ற வார்த்தையானது வேதத்தில் 'பாவத்தை அனுப்பிவிடுதல்' என்று பொருள்படுகிறது. நீங்கள் இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கும் பொழுது உங்களுடைய பாவங்கள் உங்களிடத்திலிருந்து அனுப்பப்பட்டுவிடுகிறது. நீங்களும் பாவத்திலிருந்து பிரிக்கப்படுகிறீர்கள்.
2. நம்முடைய பாவங்கள் தொலைந்துவிட்டது என்பதை அறியும் சந்தோஷமே பாவமன்னிப்பின் சந்தோஷமாகும். பாவங்கள் நீக்கப்பட்டது (எபிரெயர் 9:26) கிறிஸ்துவுக்குள் தேவன் நம்மை மன்னித்தார் (எபேசியர் 4:32).
3. மனிதன் ஒருவரை மன்னிப்பதற்கும், தேவன் மனுஷனை மன்னிப்பதற்கும் மிகுந்த வேறுபாடு இருக்கிறது. மனிதன் ஒருவனை மன்னிக்கும் பொழுது பாவத்திற்குரிய தண்டனை நினைக்கப்படாமல் போகிறது. குற்றத்திற்குரிய தண்டனை நிறைவேறாமல் போகிறது. குற்றஉணர்வு தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கிறது. குற்றமானது மறக்கப்படுவதே இல்லை. ஆனால் தேவன் நம்மை மன்னிப்பது முற்றிலும் வேறுபட்டது. குற்றம் நீக்கப்படாமல், தண்டனைக்குரிய கிரயம் செலுத்தப்படாமல் தேவன் ஒருபோதும் மன்னிப்பது கிடையாது. இக்காரியம் வேதத்தில் மிகவும் தெளிவாய் இருக்கிறது. குற்றம் ஒருபோதும் நினைக்கப்படுவது இல்லை (எபிரெயர் 10:17,18; லேவியராகமம் 4:35; எபேசியர் 1:7; மத்தேயு 26:28). தெய்வீக மன்னிப்பானது இரத்தம் சிந்துதலின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதை மனதில் கொள்ளவேண்டும்.
4. நீங்களும், நானும் குற்றமுள்ளவர்கள், அற்பமானவர்கள், உதவியற்றவர்கள், தகுதியற்றவர்கள், தகுதியற்ற பாவிகள். ஏதாவது செய்து தேவனுடைய பாவமன்னிப்பைப் பெற முடியாதவர்களாயிருந்தோம் (தீத்து 3:5,6 எபேசியர் 2:8,9. தேவன் மிகுந்த இரக்கத்தினாலே தம்முடைய குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பினார். கிறிஸ்து தம்முடைய இரத்தத்தைச் சிந்தி நம்முடைய பாவத்துக்கு ஒரு பரிகாரத்தை உண்டு பண்ணியிருக்கிறார். அவருடைய இரத்தம் நம்முடைய பாவங்களை கழுவிவிட்டது. அவைகள் திரும்பவும் நினைக்கப்படுவதில்லை (ஏசாயா 38:17; 44:22; எபிரெயர் 8:12, 10:17).
5. நாம் மன்னிப்புப் பெற்றவர்களாக மாத்திரமல்ல, பரிசுத்த தேவனுக்கு முன்பாக கிறிஸ்துவின் பரிசுத்த இரத்தத்தினால் முழுவதும் கழுவப்பட்டவர்களாய் காணப்படுகிறோம்.
   a. எபிரெயர் 1:3 – நம்முடைய பாவங்களை நீக்கினார்.
   b. வெளி. 1:6 – தமது இரத்தத்தினாலே நம்முடைய பாவங்களற நம்மைக் கழுவினார்.
   c. 1 கொரிந்தியர் 6:11 – நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள்.
   d. வெளி. 7:14– இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்தினாலே தோய்த்து வெளுத்தவர்கள்
6. ஒருநாளில் நாம் கறைதிரை முதலானவைகள் ஒன்றுமில்லாமல் பரிசுத்தமும், பிழையற்றதுமான மகிமையுள்ள சபையாக அவருக்கு முன் நிறுத்தப்படுவோம் (எபேசியர் 5:27).

**H. சாத்தானின் எல்லா தந்திரங்களையும்,வல்லமையையும் முறியடிக்க கர்த்தராகிய கிறிஸ்துவின் இரத்தம் வல்லமை உடையதாய் இருக்கிறது : (வெளி. 12:10,11)**

1. சாத்தான் பெருமைக் கொண்டதினாலே அவனுடைய ஸ்தானத்திலிருந்து தள்ளப்பட்டான் (ஏசாயா 14:12–15; எசேக்கியேல் 28:15–17). இவ்வுலகத்தில் இன்றைக்கும் அவன் உயிருள்ளவனாகவும், தன்னுடைய காரியங்களைச் செய்கிறவனாயும் இருக்கிறான் (யோபு 1:6,7).
2. சாத்தான் இன்றும் இருக்கிறான் :

a. 2 கொரிந்தியர் 4:4, "இப்பிரபஞ்சத்தின் தேவனானவன் அவர்களுடைய மனதைக் குருடாக்கினான்."

b. சாத்தான் இவ்வுலகத்தின் அதிபதியாக இருந்து, எல்லாக் காரியங்களையும் கட்டுப்படுத்துகிறவனாய் இருக்கிறான் (யோவான் 14:30; 12:31).

c. விசுவாசிகளை இன்னும் புடைக்கக்கூடியவனாய் இருக்கிறான் (லூக்கா 21:31).

d. வல்லமையுள்ள எதிராளியாக அவன் யாரை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான் (1 பேதுரு 5:8).

**குறிப்பு :**

இதைக் குறித்து மிகவும் தெளிவாக தெரிந்து கொள்வதற்கு பாடம் 5–ஐ திருப்பிப் பார்க்கவும்.

3. சாத்தானானவன் சகல வல்லமையும், வஞ்சகமும் நிறைந்தவனாய் காணப்படுகிறான் (2 தெசலோனிக்கேயர் 2:9,10; வெளி. 12:9). மரணத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை தமது மரணத்தினாலே அழித்தார் (எபிரெயர் 2:14,15). கிறிஸ்துவின் இரத்தம் சம்பாதித்த அந்த வெற்றியின் மூலம் விசுவாசிகள் ஜெயங்கொண்ட ஜீவியம் செய்ய முடியும் (வெளி. 12:10,11; எபேசியர் 6:16; 1 யோவான் 4:4, 3:8; யாக்கோபு 4:7).

**I. நாம் பரிசுத்த ஸ்தலத்தில் பிரவேசிப்பதற்கு புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ண கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் வல்லமையுடையதாய் இருக்கிறது : (எபிரெயர் 10:19)**

1. அந்த மார்க்கத்தின் வழியாய்ப் பிரவேசிப்பதற்கு அவருடைய இரத்தத்தினாலே நமக்குத் தைரியம் உண்டாயிருக்கிறது (எபிரெயர் 10:20).
2. இயேசுவானவர் தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புதிதும் ஜீவனுமான மார்க்கத்தை நமக்கு உண்டுபண்ணின படியால் நாம் தைரியமாய்ப் பிரவேசிக்கிறோம் (எபிரெயர் 10:19).
3. எல்லாத் தடைகளும் கர்த்தராகிய கிறிஸ்துவின் இரத்தத்தினாலே தகர்த்தெறியப்பட்டது. ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்றச் சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய் கிருபாசனத் தண்டையிலே சேரவும் முடிகிறது (எபிரெயர் 4:16).

**J. கிறிஸ்துவின் இரத்தம் நம்மை தேவனோடு நெருங்கி ஜீவிக்கும்படி செய்கிறது : (1 யோவான் 1:7)**

1. கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் நாம் தேவனோடு ஐக்கியம் உடையவர்களாய் மாத்திரமல்ல, அந்த இரத்தத்தினாலே காப்பாற்றப்பட்டும் வருகிறோம் (எபேசியர் 2:13; 1 யோவான் 1:7).
2. ஒரு விசுவாசி தன் நிலை தடுமாறி பின்வாங்கிப் போகும் பொழுது தேவனுக்கும் அவனுக்கும் இருக்கக்கூடிய ஐக்கியம் தற்காலிகமாக முறிந்து போகிறது. ஆனால் அவன் தவறை உணர்ந்து மனந்திரும்பி கிறிஸ்துவண்டை வரும்பொழுது மறுபடியும் அந்த ஐக்கியம் புதுப்பிக்கப்படுகிறது. காரணம் நீதிபரராயிருக்கிற இயேசுகிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார் ( 1 யோவான் 1:6–2:1).

**முடிவுரை :**

இந்த பாடத்தில் கிறிஸ்து சிந்திய இரத்தத்தின் மதிப்பு, அதனுடைய வல்லமை, விலையேறப்பெற்றத் தன்மை முதலியவற்றை அறிந்து கொள்வதின் அவசியத்தை உணர்த்த நாங்கள் பிரயாசப்பட்டிருக்கிறோம். வேதத்தில் முதலாவது ஏன் இரத்தம் சிந்தப்பட்டது என்பதை பகுத்து ஆராய்ந்தது போல, கிறிஸ்து ஏன் தம்முடைய இரத்தத்தை சிந்த வேண்டும் என்பதற்கு ஆதாரமாக உள்ள இரண்டு வசனங்களைப் பகுத்து ஆராய்ந்திருக்கிறோம். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் பத்து அதிசயமான காரியங்களை உங்களுடைய வாழ்க்கையில் செய்ய வல்லமையுடையதாய் இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டியுள்ளோம். இவைகளைப் படித்துப் பாருங்கள். திறமைசாலிகளாக, வல்லவர்களாக மாறுங்கள். எப்படி அப்போஸ்தலனாகிய பேதுருவுக்கு இந்த இரத்தம் விலையேறப் பெற்றதாய் மாறினதோ அதே விதமாக உங்களுக்கும் மாறும் (1 பேதுரு 1:18,19). உங்களது கிறிஸ்தவ ஜீவியத்தில் ஒவ்வொரு நாளும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையை அனுபவிக்க வேண்டும் என்பதே எங்களுடைய ஜெபம்.

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## இயேசுகிறிஸ்துவின் வல்லமையுள்ள இரத்தம்

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்]**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. லேவியராகமம் 17:11–ம் வசனத்தின் படி, உயிர் எதில் இருக்கிறது?

   a. ஆத்துமா

   b. இரத்தம்

   c. ஆவி

2. கிறிஸ்து நமக்காக தமது ஜீவனைக் கொடுத்தார் என்று வேதம் கூறுகிறது. அதன் பொருள் என்ன?

   a. நமக்காக அவர் இந்த உலகத்தில் பிறந்தார்

   b. நமக்காக அவர் தமது இரத்தத்தை சிந்தினார்

   c. அவரது ஜீவன் விலையேறப்பெற்றது

3. லேவியராகமம் 17:11–ம் வசனத்தின்படி எது நம்மை இரட்சிக்கிறது?

   a. உயிர் இரத்தத்தில் இருக்கிறது

   b. உங்களது ஆத்துமாவுக்கு உண்டான பாவநிவாரண பலியை பலிபீடத்தில் கொடுத்து விட்டேன்

   c. இரத்தமே ஆத்துமாவிற்கான பாவநிவாரண பலியாகும்

4. பழைய ஏற்பாட்டில் மிருகங்களின் இரத்தம் ஏன் சிந்தப்பட்டது?

   a. பாவத்தை மன்னிக்கிறதற்கு

   b. பாவத்திற்காக அல்ல

   c. பாவத்தை மூடுவதற்கு

5. அத்தி இலைகளின் ஆடை பாவத்தை மூடாது என்பதன் பொருள் என்ன?

   a. அத்தி இலைகளின் ஆடை நமக்கு தேவை இல்லை

   b. நமது குற்றத்தை தேவனுடைய சமுகத்திலிருந்து மறைத்துக்கொள்ள முடியாது

   c. பழைய ஏற்பாட்டு யூதர்களுக்கு இரட்சிப்பு கிடையாது

6. தேவன் ஒரு மிருகத்தைக் கொல்லாமல், ஆதாம் மன்னிக்கப்பட்டான் என்று சொல்லவில்லை. காரணம் என்ன?

   a. தேவன் இரத்தத்தைப் பார்க்க வேண்டியிருந்தது

   b. உயிர் இரத்தத்தில் இருக்கிறது

   c. தேவனின் நீதி திருப்தி செய்யப்பட வேண்டும்

7. பாவத்துக்கு மரண தண்டனை வேண்டும் என்று எந்த வசனம் காண்பிக்கிறது?

   a. கலாத்தியர் 2:20

   b. எசேக்கியேல் 18:20

   c. கலாத்தியர் 1:4

8. பாவம் தண்டிக்கப்பட வேண்டும். கீழே உள்ள மூன்று காரியங்களில் தேவன் எதை தெரிந்தெடுப்பார்?

   a. ஆதாம் தனது பாவத்துக்காக மரிக்க வேண்டும்

   b. ஆதாமின் பாவத்துக்காக ஒரு பதிலாள் மரிக்க வேண்டும்

   c. தேவன் பாவத்தை மறந்துவிட்டு, ஆதாமை மன்னிக்க வேண்டும்

9. தேவன் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் உடையைக் கொடுத்தார். அது எதற்கு அடையாளம்?

a. தேவனின் நீதி

b. தேவனின் தீர்ப்பு

c. தேவனின் பரிசுத்தம்

10.ஒரு பாவி எதன் மூலம் தேவனுடைய நீதியைப் பெறுகிறார்? (2 கொரிந்தியர் 5:2–ன்படி)

a. மறுபிறப்பு

b. தத்தெடுத்தல்

c. கிறிஸ்து நமக்காகப் பாவமாக்கப்பட்டதினால்

11. நீதிமானாக்கப்படுதல் என்றால் என்ன?

a. தேவன் சட்டப்பூர்வமாக ஒரு பாவியை தமக்கு முன் நீதிமான் என்று அறிவித்தல்

b. தேவன் அதிகாரப்பூர்வமாக ஒரு விசுவாசியின் கடந்த காலப் பாவங்கள் மட்டும் மன்னிக்கப்பட்டிருக்கிறது என்று அறிவித்தல்

c. தேவன் அதிகாரப்பூர்வமாக ஒரு விசுவாசி பாவம் இல்லாமல் இருக்கிறார் என்று அறிவித்தல்

12. நீதிமானாக்கப்படுதலுக்கான அதிகாரத்தை கொடுப்பது யார்?

a. ஆசாரியன்

b. கிறிஸ்துவின் சிலுவை

c. தேவன்

13.நீதிமானாக்கப்படுதலை நாம் எதன் மூலம் பெற்றுக் கொள்கிறோம்?

a. கிரியை

b. விசுவாசம்

c. விசுவாசமும், கிரியையும் சேர்ந்து

14.நீதிமானாக்கப்படுதலுக்கான ஆதாரம் எது?

a. தேவ நீதி b. தேவ அன்பு c. தேவ கிருபை

15.நீதிமானாக்கப்படுதலுக்குச் செலுத்தப்பட்ட கிரயம் என்ன?

a. இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

b. சிந்தப்பட்ட இயேசு கிறிஸ்துவின் இரத்தம்

c. இயேசு கிறிஸ்துவின் மனித பிறப்பு

16.கீழே உள்ள வாக்கியங்களில், மீட்பின் வார்த்தையைக் குறிப்பது எது? **மூன்றை** வட்டமிடுக.

a. பாவச் சந்தையில் நீங்கள் அடிமைகளாக இருந்தீர்கள்

b. தேவனின் மகிமையை விட்டு நீங்கள் விலகி விட்டீர்கள்

c. இயேசு கிறிஸ்து உங்களது பாவத்துக்காக மரித்திருக்கிறார்

d. பாவத்தின் அடிமைச் சந்தையிலிருந்து நீங்கள் வாங்கப்பட்டிருக்கிறீர்கள்

e. இந்த பாவச் சந்தையில் நீங்கள் மறுபடியும் விற்கப்பட மாட்டீர்கள்

f. பாவ அடிமைச் சந்தையில் நீங்கள் மறுபடியும் விற்கப்பட முடியும்

17.பிரதான ஆசாரியன் உடன்படிக்கைப் பெட்டியின்மீது இரத்தத்தைத் தெளிக்கும்போது எதுவாக மாறுகிறது?

a. பிரதான ஆசாரியன் உட்காரும் இடமாக மாறுகிறது

b. இரக்கத்தின் கிருபாசனமாக மாறுகிறது

c. இஸ்ரவேல் மக்களை நியாயந்தீர்க்கும் இடமாக மாறுகிறது

18.ஒரு விசுவாசியின் கிருபாசனம் யார்?

a. பிரதான ஆசாரியன் b. சபை c. இயேசுகிறிஸ்து

19.கிருபாசனம் கிறிஸ்துவின் சிலுவையைப்போல எப்படி இருக்கிறது?

a. இரண்டும் மரத்தால் செய்யப்பட்டது

b. தேவனையும், மனிதனையும் இணைப்பதற்காக இரண்டிலும் இரத்தம் சிந்தப்பட்டது (தெளிக்கப்பட்டது)

c. இரண்டும் தேவனிடத்திலிருந்து வந்தது

20. ஒப்புரவாகுதலில் யார், யாரோடு ஒப்புரவானது?

a. தேவன் மனிதனோடு

b. மனிதன் தேவனோடு

c. மனிதன் மனிதனோடு

21.தேவனின் பாவமன்னிப்பில் உள்ள ஆசீர்வாதம் என்ன?

a. தேவன் குற்றத்தை மறந்துவிடுகிறார்

b. தேவன் குற்றம் செய்தவரை ஒருபோதும் தண்டிப்பதில்லை

c. தேவனின் நற்குணம் அவரது கோபத்தைவிட மேலானது

22. விசுவாசி பாவம் செய்தால் என்ன நிகழும்?

a. விசுவாசி இரட்சிப்பை இழந்துவிடுகிறார்

b. தேவனின் தண்டனை உடனே விசுவாசியின்மீது வருகிறது

c. தேவனின் மன்னிப்பைப் பெறும் வரைக்கும் தேவனோடு உள்ள ஐக்கியம் உடைந்துவிடுகிறது

23. பொருத்துக :- கீழே உள்ள வசனங்களின்படி இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எதற்கு வல்லமையுடையதாய் இருக்கிறது? **(சரியான வசனத்தை வார்த்தைக்கு முன்பு எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| --------- | பரிசுத்த தேவனுக்கு முன்பாக நம்மை நீதிமானாக்குவது | a. 2 ரோமர் 3:25 |
| --------- | பாவத்திலிருந்து நம்மை மீட்பது | b. கொலோசெயர் 1:20 |
| --------- | கிருபாதாரப்பலியை உண்டாக்குவதற்கு | c. வெளி. 12:10,11 |
| --------- | தேவனோடு நம்மை ஒப்புரவாக்குவதற்கு | d. 1 யோவான் 1:7-9 |
| --------- | பாவமன்னிப்பும், சுத்திகரிப்பும் உண்டாக்குவதற்கு | e. 1 பேதுரு 1:18,19 |
| --------- | சாத்தானை தோற்கடிப்பதற்கு | e. ரோமர் 5:9 |

24. ரோமர் 5:10-ன்படி, ஒப்புரவாகுதலின் மூலம் எது நீக்கப்படுகிறது?

------------------------------------------------------------------------------------------

25. கிறிஸ்து சாத்தானுக்கு என்ன செய்தார் என்பதைக் குறித்து எபிரெயர் 2:14,15 வசனங்கள் சொல்வது என்ன?

------------------------------------------------------------------------------------------

26. எபிரெயர் 10:19-ம் வசனம், ஒரு விசுவாசி தைரியமாக ---------------------------------------------- பிரவேசிக்கலாம் என்று போதிக்கிறது.

---

**அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்**

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________________________________

**முகவரி :** ____________________________________________

____________________________________________